செ.வெ.எண்.482/2021 நாள்.26.10.2021

**திருப்பத்தூர் நகராட்சி கற்பகம் கூட்டுறவு பண்டகசாலையில் தீபாவளி பண்டிகையொட்டி பட்டாசு விற்பனை அங்காடியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்கள்.**

திருப்பத்தூர் நகராட்சி கற்பகம் கூட்டுறவு பண்டகசாலையில் தீபாவளி பண்டிகையொட்டி பட்டாசு விற்பனை அங்காடியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கத்தின் சார்பில் கற்பகம் கூட்டுறவு பண்டகசாலையில் தீபாவளி பண்டிகையொட்டி பட்டாசு விற்பனை அங்காடி திறந்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பட்டாசு கடையில் உதிரி பட்டாசுகள், கிப்ட் பாக்ஸ், சர வெடிகள், மத்தாப்புகள், பூத்தொட்டிகள், சங்கு சக்கரங்கள், கிளாசிக் வெடிகள் உள்ளிட்ட பல்வேறு புதிய இரகங்கள் ஸ்டேன்டர்டு (Standard) மற்றும் வீட்டூ (Wetwo) போன்ற நிறுவனத்தின் பட்டாசுகள் குறைந்த விலையில் கிடைக்கும். திருப்பத்தூர் நகராட்சியில் தூயநெஞ்சக்கல்லூரி எதிரிலும், திருப்பத்தூர் நகராட்சி மார்கெட் பகுதியில் என 2 கற்பகம் கூட்டுறவு பண்டகசாலை பட்டாசு விற்பனை அங்காடியும், வாணியம்பாடி பூக்கடை பஜார் பேங்க்ரேவ் பகுதியில் ஒரு பட்டாசு விற்பனை அங்காடி என மொத்தம் 3 கற்பகம் கூட்டுறவு பண்டகசாலை பட்டாசு விற்பனை அங்காடிகள் இன்று முதல் இயங்கி வருகின்றன.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் அனைவரும் இத்தீபாவளி பண்டிகையை கற்பகம் கூட்டுறவு பண்டகசாலையில் அமைந்திருக்கும் பட்டாசு அங்காடியில் விற்பனை செய்யப்படும் பட்டாசுகளை வாங்கி கற்பகம் கூட்டுறவு பண்டகசாலை பட்டாசு அங்காடிகளுக்கு நல்ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கற்பகம் கூட்டுறவு பண்டகசாலை இணை பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் திருமதி.ரேனுகாம்பாள், கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் (திருப்பத்தூர் சரகம்) திரு.முனிராஜி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் திரு.இராஜேந்திரன், கற்பகம் கூட்டுறவு பண்டகசாலை மேலாளர் திரு.ஞானவேல், மாவட்ட நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.சரவணன், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் திரு.வெங்கடேசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**